| | | |
|---|---|---|
| சாட்சி : PW3<br>சேகர், த/பெ சுந்தரம் | அ.வ.எண்.55/2016 | 24.04.2026 |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

3. 04.09.1968 மற்றும் 04.08.1971 பத்திரங்களில் ஸ்ரீமாரியம்மன் ரதஉற்சவ 9ம் நாள் தேர் திருவிழா பஞ்சப்பிரகார உற்சவ விஸ்வபிராமண பொதுஜன சமராதனை தண்ணீர் பந்தல் தர்மம் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் செட்டில்மெண்ட் மற்றும் கிரைய பத்திரங்கள் ஆகும். வா.சா.ஆ.1 பத்திரத்தில் தாவா சொத்து இனாம் புஞ்சை என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொடுத்த நபர்களான பெரியண்ணன் மற்றும் சுப்ரமணியன் வகையறா மற்றும் என்ன மூல ஆதாரத்தின் வழியாக எழுதி வைத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. இனாம் நிலம் அனைத்தும் அருகில் உள்ள கருப்பண்ணசாமி கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. இனாம் நிலத்தை பொறுத்து தனி நபர் பத்திரம் எழுதவே உரிமையில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் தான் மூல ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள இனாம் புஞ்சை என்பதை வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிட்டு காண்பிக்காமல் உள்ளதற்கு சிறப்பு காரணம் இல்லை என்றால் தெரியாது. கோவிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தை தவறான முறையில் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் மேற்படி இனாம் என்ற வார்த்தையை மறைத்து வழக்குரை சொத்து விவரத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

5. எங்களுடையது விஷ்வ கர்ம மகாஜன சங்கம் என்றால் சரிதான். சங்கங்களின் பதிவு சட்டத்தின்படி சங்கத்தின் வரவு செலவுகள் மற்றும் வழக்கு சொத்துக்கள் குறித்து சங்கங்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்குரை பெருந்தலைப்பு மற்றும் குறுந்தலைப்பில் தாவா சொத்து அறக்கட்டளைக்கு சொந்தமானது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சங்கம் என்றும் அறக்கட்டளை என்றும் இரண்டு கட்சிகளை எடுக்க நான் சட்டப்படி தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. வழக்குரை பெருந்தலைப்பு மற்றும் குறுந்தலைப்பு சம்மந்தமான இந்து சமய அறநிலையத்துறையிலிருந்து டிரஸ்டி என்று சொல்லி எந்த உத்தரவும் பெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ/மி மாரியம்மன் கோவில் ச.கண்ணனூர் மேற்கு கிராமத்தில் அமைந்து அது ச.கண்ணனூர் பேருராட்சியில் வருகிறது என்றால் சரிதான். மேற்படி கோவிலிருந்து சமயபுரம் ஊராட்சியில் அமைந்துள்ள ஆதி மாரியம்மன் கோவில் 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

7. 14.04.2026ம் தேதி ச.கண்ணனூர் அ/மி மாரியம்மன் கோவில் தேர் திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி திருவிழாவின் போது ச.கண்ணனூர் கோவில் மாரியம்மன் தெய்வதிருஉரு வழிநடை உபயம் தாவா சொத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். அப்போது பிரதிவாதிகள் தரப்பில் நாங்கள் செய்த ஆன்மீக செயல்பாட்டிற்கு மற்றும் அன்னதான தர்மங்களுக்கு இடையூறு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளால் ஒத்துழைப்பு

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. தாவா சொத்தில் உள்ள தண்ணீர் இணைப்பு குழாயை அன்றைய தினம் நாங்கள் பயன்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான். தண்ணீர் எடுப்பதை பிரதிவாதிகள் தடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் இடத்தில் உள்ளதால் அவர்கள் தடுக்கவில்லை. சமயபுரம் ஆதி மாரியம்மன் கோவிலில் கடைசியாக தேர் திருவிழா எப்போது நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சித்திரை தேர் திருவிழாவை தவிர மற்ற சமயங்களில் தாவா சொத்திற்கு நாங்கள் சென்று வருவதில்லை என்றால் பிரதிவாதிகள் அங்கு இருப்பதால் நாங்கள் சென்று வருவதில்லை.

9. சித்திரை தேர் திருவிழாவை தவிர மற்ற தினங்களில் அன்னதானம் மற்றும் தண்ணீர் பந்தல் அமைத்து தர்ம காரியங்கள் எதுவும் செய்யவில்லை என்றால் பிரதிவாதிகள் தாவா சொத்தில் இருப்பதால் நாங்கள் செய்யவில்லை. சித்திரை தேர் திருவிழாவை போல் மற்ற நாட்களிலும் நாங்கள் பிரதிவாதிகளிடம் அனுமதி கேட்டிருந்தால் பிரதிவாதிகள் செய்துகொடுக்க தயாராக இருந்திருப்பார்கள் என்றால் பிரதிவாதிகள் அங்கு இல்லாமல் இருந்தால் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் காதுகுத்து போன்ற நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய ஏதுவாக இருக்கும்.

10. சித்திரை தேர் திருவிழாவை தவிர காதுகுத்து மற்றும் தர்ம காரியங்கள் செய்ய பிரதிவாதிகளிடம் நாங்கள் எழுத்துபூர்வமாக அல்லது வாய்மொழியாக அனுமதி கோரியுள்ளோமா என்றால் இல்லை. சித்திரை தேர் திருவிழாவின் போது தர்ம காரியங்கள் செய்ய தாவா சொத்தின் சுவாதீனம் எங்களுக்கு வேண்டும் என்பது

தான் எங்கள் கட்சி என்றால் எல்லா நாட்களும் எங்களுக்கு சுவாதீனம் வேண்டும். தாவா சொத்து இருக்கும் விவரம் எனக்கு 20 வருடங்களாக தெரியும். 25 வருடங்களாக தொடர்ச்சியாக மேற்குரிய சித்திரை தேர் திருவிழா தர்ம காரியங்கள் தவிர வேறு எந்த தர்ம காரியங்களும் நடைபெறவில்லை என்றால் சரிதான். (சாட்சி தற்போது எனக்கு தெரியாது பெரியவர்களுக்கு தெரிந்திருக்கும் என்று சொல்கிறார்).

11. ச.கண்ணனூர் கோவில் பஞ்சப்பிரகார விழா எந்த நாளில் நடைபெற்று எந்த நாளில் முடியும் என்றால் சித்திரை மாதத்தில் ஆரம்பித்து அந்த மாதத்திலேயே முடிந்துவிடும். மேற்படி கோவிலில் பஞ்சப்பிரகார விழா எப்போது நடக்கும் என்று எனக்கு தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வழக்குரையிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் பஞ்சப்பிரகார விழாப்பற்றி குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ராஜரெத்தினம் அவர்களுக்கும், 1ம் பிரதிவாதி மருதமுத்து அவர்களுக்கும் தாவா சொத்து குறித்து என்ன உடன்படிக்கை ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி ச.கண்ணனூர் அ/மி மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவிற்காக மேற்படி கோவிலில் 1ம் பிரதிவாதி மருதமுத்து, அவருக்கு பின் அவரது மகன் 2ம் பிரதிவாதி ஆகியோர் உரிய தொகைகளை மேற்படி கோவிலிடம் செலுத்தி ரசீது பெற்றுள்ளார் என்றாலும், அவ்வாறு வாடகையை செலுத்தி நேர் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

12. அ.வ.எண்.58/2005 தாக்கல் செய்த வழக்கின் 1,2 வாதிகள் (மருதமுத்து, மணிகண்டன்) வாதி தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ள ச.கண்ணனூர் அ/மி மாரியம்மன் கோவில் தேர் திருவிழாவிற்கு செலுத்திய தொகைகளையும், வீட்டு வரி ரசீதுகளையும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ராஜரெத்தினத்தின் பெயரில் தாவா சொத்திற்கான வீட்டு வரி ரசீது, சொத்து வரி ரசீது, குடிநீர் கட்டண ரசீதுகள் ஆகியவைகளை இந்த வழக்கின் பிரதிவாதிகள் செலுத்தியுள்ள விவரம் தெரியுமா என்றால் அவர்கள் அவ்வாறு செலுத்தவில்லை, தலைவர் தான் செலுத்தியுள்ளார். நான் மேற்படி விவரம் தெரிந்து கொண்டு தற்போது வழக்கிற்காக தலைவர் செலுத்தியுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. அ.வ.எண்.58/2005 வழக்கில் நான் பிரதிவாதி தரப்பு 1 வது சாட்சியாக விசாரிக்கப்பட்டேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் திருச்சி மாவட்டம், துறையூர் அஞ்சல், முசிறி பிரிவு ரோடு, சக்தி லாரி பில்டர்ஸ்ல் வசிக்கும், சுந்தரம் அவர்கள் குமாரர், இந்து மதம், வயது 50, முகவரி சேகர் ஆகிய நான் என்று குறிப்பிட்டுள்ள விவரம் சரிதான். மேற்படி வாக்குமூலம் 02.11.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் துறையூர், மதுராபுரி, நேதாஜி நகர், கதவு எண்.728 ல் வசித்து வரும் சுந்தரம் அவர்களின் குமாரர், இந்து மதம், வயது 67, S,சேகர் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம்

25.03.2026 என்றால் சரிதான். மேற்படி இரு வாக்குமூலங்களுக்கும் இடையே வயது வித்தியாசம் அதிகமாக உள்ளது என்றால் 67 க்கு பதிலாக 50 என தவறாக தட்டச்சு செய்துள்ளார்கள்.

14. நான் 1959 ல் பிறந்தேன். 02.11.2024 ம் தேதி தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்துவிட்டு முன்னுக்கு பின் முரணாக படித்து பார்க்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி முரண்பாட்டை போல் பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு சொத்து வரி, குடிநீர் வரி, வீட்டு வரி மூலம் வாடகை செலுத்தியுள்ளதை அவர்கள் அதில் ஒரு ரூபாய் கூட கொடுக்கவில்லை என உண்மைக்கு முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

15. அ.வ.எண்.55/16 என்ற வழக்கில் தாவா சொத்து இனாம் வகைப்பாட்டில் உள்ளதை குறிப்பிட்டு சொன்ன பிறகும் வருவாய் துறை அலுவலகத்திற்கு சென்று தாவா சொத்து என்ன பட்டாதாரர் பெயரில் பதிவாகியுள்ளது என்பதை பார்த்தேனா என்றால் இல்லை. வருவாய் பதிவேடுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமைக்கும் காரணம் இல்லை என்றால் சரியல்ல. வருவாய் பதிவேடுகளை தாக்கல் செய்தால் உண்மை விவரம் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வழக்கு எனக்கும், பாக்கியத்தம்மாளுக்கும் தான் நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கில் 1 ம் பிரதிவாதி மருதமுத்து மற்றும் அவரது

வம்சாவழியினரை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இனாம் வகைப்பாட்டு சட்டத்தின்படி அந்த வழக்கு மேல்வார உரிமைக்காக நடைபெற்றது என்றாலும், அந்த வழக்கில் இந்த பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் மேற்படி தீர்ப்பு இந்த வழக்கு பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. பாக்கியத்தம்மாளும், நானும் சேர்ந்து கூட்டு சதியாக மேற்படி தீர்ப்பை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள 1ம் வாதி டிரஸ்டானது இந்து சமய அறநிலையத்துறையால் அங்கிகரிக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16. இந்து சமய அறநிலையத்துறை என்பது 1ம் வாதியை டிர்ஸ்டாக அங்கிகரிக்கவில்லை என்றாலும், 1ம் வாதிக்கு ஆதரவாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை என்றாலும் மேற்படி டிரஸ்ட் இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு செய்யப்பட்டதாக எனக்கு தெரியாது. நான் அது தொடர்பாக பதிவு செய்யப்பட்டதா என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வழக்குரை பெருந்தலைப்பு மற்றும் குறுந்தலைப்பு சொல்லியுள்ளபடி இந்து சமய அறநிலையத்துறை எந்த அங்கிகாரமும், உத்தரவும் எங்கள் சங்கத்திற்கு வழங்கவில்லை என்றாலும், நாங்களே சுயமாக ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டு அ.வ.எண்.55/2016 என்ற வழக்கில் கட்சி செய்துவருகிறோம் என்றால் சரியல்ல.

17. வழக்குரை பெருந்தலைப்பு மற்றும் குறுந்தலைப்பில் கற்பனையாக உருவகப்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள

வாதி தரப்பு சான்றாவணங்களில் வழக்குரை பெருந்தலைப்பு மற்றும் குறுந்தலைப்பு குறித்த வாசகங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. உங்கள் சொத்து வரி மற்றும் இதர வரிகளில் விஷ்வ கர்ம மகாஜன சங்கம் என்ற வாசகம் மட்டுமே இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். சங்கமா, அறக்கட்டளையா என்ற எந்த தெளிவும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்யவே எங்களுக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

18. 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி கமலா ஆகியோரை தாவா சொத்திலிருந்து அ.வ.எண்.58/2005 ன் நான் உள்ளிட்ட பிரதிவாதிகளும் 10.02.2005 முதலும், பின்பும் சட்ட விரோதமாக காலி செய்ய முயற்சி செய்ததால் மருதமுத்து தன்னுடைய சுவாதீனத்தை பாதுகாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது என்றாலும், வாடகை கேட்டதால் தான் மேற்படி வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.58/2005 வழக்கிற்கு முன்பு 1ம் மருதமுத்துவிற்கு வாடகை கொடுக்க கோரி வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது கடிதமோ கொடுத்தோமா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி மருதமுத்துவிடம் அறிவிப்பு மற்றும் கடிதம் மூலமாக வாடகையை நேர் செய்ய கோராமல் பொய்யான சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

19. சொத்து வரி, குடிநீர் வரி, வீட்டு வரி ஆகியவற்றை மருதமுத்து கோவில் நிர்வாகத்திடம் தொகை கட்டி நேர் செய்துவிட்டதால் தான் நாங்கள் வாடகை எதுவும் கோரி அறிவிப்பு மற்றும் கடிதம் எதுவும்

அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் வாடகைக்கு விடவில்லை, நாங்கள் வெளியூரில் இருப்பதால் மருதமுத்து வகையறாவை தாவா சொத்துக்களை பார்த்து கொள்வதற்காக குடி வைத்திருந்தோம். வரி ரசீதுகள் அனைத்தும் நாங்கள் தான் செலுத்தி வந்தோம். எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் மருதமுத்து வாடகைக்கு இருந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் வாடகை காலம் எவ்வளவு என்று சொல்லியுள்ளேனா என்றால் வாடகைக்கு விடப்பட்டதாக நான் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5ல் வாடகை காலம் முடிந்தும் என கண்டுள்ளது என்றால் சரிதான். அது எத்தனை ஆண்டு காலம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

20. நான் வழக்கின் பொருண்மைகள் எதுவும் தெரியாமல், வாடகைக்கு இல்லை என்றும், வாடகை காலம் எவ்வளவு என்று தெரியாது என்றும் முரண்பட்டும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு பிரதிவாதிகள் செயல்படவில்லை என்றாலும், பிரதிவாதிகள் தேர் திருவிழாவின் போது ஒத்துழைப்பு தருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எந்த கெட்ட நோக்கமும் இல்லை என்றால் சரியல்ல. சமயபுரம் ஊராட்சிக்கு கட்டுப்பட்ட மாரியம்மன் கோவிலுக்கும், ச.கண்ணனூர் கிராமத்திற்கு கட்டுப்பட்ட மாரியம்மன் கோவிலுக்கும் வேறுபாடு தெரியாமலும், திருவிழா விவரங்கள் தெரியாமலும், உண்மை பொருண்மைகள் தெரியாமலும் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கருப்பண்ணசாமிக்கு உரிமை மூலம் உடைய இனாம் வகைப்பாட்டில் உள்ள தாவா சொத்தை கைபற்றும் வகையில் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**Signed,**
**சேகர்**

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.